பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 17 திங்கட்கிழமை 01.07.2024 கதிர் 236

# நிரந்தரமாக விடைபெற்றார் பெருந்தலைவர் சம்பந்தன்



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் தனது 91ஆவது வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

நீண்ட நாட்களாக அவரது முதுமை காரணமாக உடல் நலக் குறைவடைந்திருந்த அவர் நேற்றையதினம் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பதில் சட்டமா அதிபராக ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க இன்று பதவியேற்பார் என்று தெரிகிறது. சட்டமா அதிபர் சஞ்ஜய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை 6 மாதங்களுக்கு நீடிக்க ஜனாதிபதி பரிந்துரைத்தார். ஆனால் அரசமைப்புச் சபை அதனை நிராகரித்தது. அப்படியிருந்தும் ஜனாதிபதி அவருக்கு பதவி நீடிப்பு வழங்கினார். அரசமைப்புச் சபை அதனையும் நிராகரித்தது. இதனால் எழக்கூடிய அரசியல் சர்ச்சைகளுக்கு நடுவில் சிக்கிக்கொண்டு தனது பெயரைக் கெடுத்துக்கொள்ள விரும்பாத சட்ட மா அதிபர் தனது 60ஆவது வயதில் ஓய்வுபெற்றுச் சென்றுவிட்டார். அதனால் வெற்றிடமாகியுள்ள இடத்திற்கு ஜனாதிபதி இன்னமும் -புதியவரை நியமிக்கவில்லை. அதனால் பதில் சட்ட மா அதிபர் பதவியேற்கவுள்ளார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் -புதிய சட்ட மா அதிபர் இன்று பதவியேற்கவுள்ளார் என்று தெரிகிறது. சட்டமா ☞ 2

## எரிபொருள் விலை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டது

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது எரிபொருள் விலையை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த திருத்தங்களின் கீழ், மூன்று வகையான எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படவுள்ள அதேவேளை, இரண்டின் விலையில் மாற்றமில்லை.

இதன்படி, ஒக்டேன் 92 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 11 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 344 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 41 ரூபாவால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 379 ரூபாவாகும்.

ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை 22 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளதுடன் அதன் புதிய விலை 355 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்டோ டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. இதன்படி, ஆட்டோ டீசல் லீற்றர் ☞ 2

## பேச மட்டுமே தெரிந்திருக்கும் தலைவர்கள் தேவையில்லை

### அமைச்சர் கஞ்சன

பேச்மட்டுமேதெரிந்த தலைவர்களைஎதிர்வரும் தேர்தலில் தெரிவு செய்யக் கூடாது. நமது எதிர்காலத்தை வலுப் படுத்தக்கூடிய தலைவர் ஒருவர் தேவை என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர,

மாத்தறை கோட்டை விளையாட்டரங்கில் 'ஒன்றாக வெல்வோம் - நாம் மாத்தறை' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மாத்தறை மாவட்டம் ஒவ்வொரு நாளும் வரலாற்று ☞ 2

## தேர்தல்கள் தொடர்பில் பேசித் தீர்மானிக்கலாம்

### ஜனாதிபதி ரணில் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு

நாட்டுக்கு முதலிடம் வழங்கி ஆளும் தரப்புடன் இணைந்துகொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர்களை கேட்டுக்கொள்கிறேன். ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அந்தத் தீர்மானங்களுக்கு இணங்க செயற்பட நானும் தயார். எங்களுக்கு இன்று தனிநபர், கட்சி சார்பு அரசியல் இல்லை. நாம் நாடு குறித்து சிந்திக்க வேண்டும். நாட்டை முன்னிலைப்படுத்தி முன்நோக்கிப் பயணிப்போம் என்று கூறவிரும்புகிறேன். என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

தற்போதைய ஆளும் தரப்பின் வேலைத் திட்டம் மற்றும் முன்நோக்கிச்செல்லும் வழிகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்று மாத்தறை கோட்டை விளையாட்டரங்கில் ☞ 2

### கடலில் கடற்படையினர் சாவு

## இந்தியாவிடம் கரிசனை தெரிவித்த இலங்கை

எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை கைதுசெய்தபோது இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழக்கநேரிட்டமை குறித்து இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகாராலய இராஜதந்திரி ஒருவரை அழைத்து இலங்கை வெளிவிவகார அமைச்சு தனது கரிசனையை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சியான சட்டவிரோதமான மீன்பிடித்தல் நடவடிக்கைகள் குறித்தும் இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகள் குறித்தும் இழுவைமடி படகுகள் குறித்தும்; இலங்கை உத்தியோகபூர்வ அறிக்கையொன்றை இலங்கையின் வெளிவிவகார அமைச்சக அதிகாரியொருவர் இந்திய இராஜாதந்திரியிடம் கையளித்துள்ளார்.

இந்திய இராஜதந்திரி இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு கடந்த வெள்ளிக்கிழமை அழைக்கப்பட்டார் என்று 'தஇந்து நாளிதழ்' தெரிவித்துள்ளது.

இலங்கையின் கரிசனையை வெளியிடுவதற்காகவே அவர் அழைக்கப்பட்டார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளதோடு இந்திய வெளிவிவகார அமைச்சரின் கவனத்திற்கு இந்த விடயத்தை ☞ 2

## ஜனாதிபதியின் ஆட்பிடிக்கும் முயற்சி வெறும் கனவாகும்

### எதிர்க்கட்சித்தலைவர் சஜித் காட்டம்

ஐக்கிய மக்கள் சக்தி பொது மக்களுடன் இருப்பதால் தேர்தல் நடத்தும் நேரம் எமக்கு முக்கியமில்லை. எந்த தேர்தலுக்கும், எந்த சந்தர்ப்பத்திலும் தயார். ஐக்கிய மக்கள் சக்தியை விட்டுவிட்டு எவரும் ஐக்கியதேசியக்கட்சியில் இணைய மாட்டார்கள். ஜனாதிபதிக்கு அந்த முயற்சி கனவாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றைய தினம் கண்டிக்கு விஜயம் செய்து, மல்வத்து ☞ 8

## பொருளாதார மீட்சிக்கான தீர்வை ஐ.ம.சக்தியால் மட்டுமே தரமுடியும்

### மாத்தளையில் சஜித் தெரிவிப்பு

ஜனாதிபதி கனவில் பலர் இருந்தாலும், நாட்டின் டொலர்கள் பற்றாக்குறைக்கும், ரூபாக்களின் பற்றாக்குறைக்கும் 76 ஆண்டுகால அரசியல் வரலாற்றில், அதிகாரம் இல்லாமல் சேவைகளை முன்னெடுத்து வரும் ஒரே தரப்பான ஐக்கிய மக்கள் சக்தியினாலயே பதில் சொல்ல முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். ☞ 2

## ரணிலே மீண்டும் ஜனாதிபதியாக வேண்டுமென ராஜபக்ச விருப்பம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதிபதவியைஏற்று வரவு, செலவுத்திட்டத்தில் மொனராகலைக்கு அதிக நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவேண்டுமென ராஜபக்ஷக்களின் மூத்தவரான சமல் ராஜபக்ஷவின் புதல்வரும் இராஜாங்க அமைச்சருமான ஷசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

20 இலட்சம் காணி உறுதிகளை வழங்கும் 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தில் 600 பேருக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெல்லவாயவில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

இன்று உங்களுக்கு மிக முக்கியமான நாள். மண்ணோடுபோராடிஒரு அங்குலத்தையேனும் விட்டுவைக்காது இந்த நாட்டிற்கு பெரும் விளைச்சலைத்பெற்றுத் தருகின்றீர்கள். மூன்று வேளைக்கும் சோறு கேட்கும் மக்களுக்கு நீங்கள் செய்த சேவைக்காக நீங்கள் கௌரவிக்கப்பட்டுள்ளீர்கள்.

ஜனாதிபதியின் கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப் படும் 20 இலட்சம் ☞ 8

## ரணிலைத் தவிர வேறு மாற்றுவழியே இல்லை

### அடித்துக்கூறுகிறார் அமைச்சர் ஹரீன்

எமதுநாட்டுக்குவேறு மாற்றுவழியில்லை. ஒரே மாற்றுவழி ரணில் விக்ரமசிங்க மட்டுமே என்று சுற்றுலா, காணி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மாத்தறை கோட்டை விளையாட்டரங்கில் 'ஒன்றாக வெல்வோம் 'நாம் மாத்தறை' என்ற தொனிப்பொருளில் ☞ 2

காலைக்கதிர் Kalāikkathir

## இனி இது .....

அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்க, முன்னாள் பிரதம நீதியரசரான கே.ஏ.பாரிந்த ரணசிங்கவின் புதல்வராவார். தனக்கு வாய்ப்பான ஒருவர் புதிய சட்ட மா அதிபராகக் கிடைக்கும்வரைக்கும்பதில்சட்டமா அதிபரையேபதவியில்வைத்திருக்க ரணில் முடிவெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் மாவட்டச் செயலர்களை நியமிக்காமல்பதில்மாவட்டச்செயலர்களை நியமித்ததுபோன்று.உரியபதவியில் உரியவர் இல்லையென்றால் பதில்களைக் கொண்டு பல விடயங்களை தமக்குச் சார்பாகச் செய்துகொள்ளலாம்என்று ஆளும் தரப்பில் பலரும் கருதுகின்றார்கள் என்பதை அறியமுடிகின்றது. இருந்தாலும் தேர்தல் சமயத்தில் சட்ட மா அதிபர் ஒருவர் இல்லாமல் இருப்பது எதிர்க் கட்சிகளின் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகும்.

...........................

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் ஆளும் தரப்புடன் இணைந்துகொள்ள இருக்கிறார்கள் என்று கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக ஆளும் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அதனை ஒரு பரப்புரையாகவே முன்னெடுத்தார்கள். ஆளும் தரப்பிலிருந்த முக்கிய தரப்புக்கள் பல இதனை ஒரு இரகசியத் தகவல் போன்று ஊடகங்களுக்கு அவ்வப்போது கசிய விட்டுக்கொண்டே இருந்தன. இந்தக்கயிறைவிழுங்கிக்கொண்டு ஊடகங்களும் இதே இன்று கட்சி தாவுகிறார்கள். இந்த வாரம் கட்சி தாவுகிறார்கள் என்று எழுதி வந்தன. ஆனால் அப்படியெதும் நடக்கவில்லை.

ஆனைக்கொரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வந்துதானே ஆகவேண்டும், அதனால், அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்குள் ஆளும்தரப்புடன் இருக்கும் 12 பேர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொள்ள இருக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கியமக்கள்சக்தியிலிருந்து20 பேர்இணைந்துகொள்ளப்போவதாக ஒரு வருடத்துக்கு முன்பிருந்தே அரசாங்கம் தெரிவித்து வருகிறது. ஆனால் எமது தரப்பிலிருந்து ஹரின், மனுஷவை தவிர வேறு யாரும் இதுவரை செல்லவில்லை. ஆனால் ஆளும் தரப்பிலிருந்து இதுவரையில் 11 பேர் எம்முடன் இணைந்துகொண்டுள்ளனர். அடுத்துவரும்இரண்டுவாரங்களில் மேலும் 12 பேர் எம்முடன் இணைந்துகொள்ளஇருக்கின்றனர்.

அதேநேரம்முஸ்லிம்காங்கிரஸ், தமிழ் கட்சிகள் மற்றும் ரிஷாத் பதியுதீன் கட்சியை சேர்ந்த 12 பேர் எம்முடன் கூட்டணி அமைக்க இருக்கின்றனர். நாட்டின் வரலாற்றில்பலம்மிக்ககூட்டணியை இன்னும் சில தினங்களில் நாங்கள் அமைக்க இருக்கிறோம். ஆளும்தரப்பு எம்முடன் இருப்பவர்களை இழுத்துக்கொள்ள முயற்சிக்கின்றபோதும் நாங்கள் ஆளும்தரப்பில் இருப்பவர்களை எம்முடன் இணைத்துக்கொண்டு வருகிறோம் - என்றார். பார்க்கலாம், இதுவாவது உண்மையாக நடக்கிறதா என்று!

................

சம்பந்தர் ஐயாவின் இறுதிக் கிரியைகள் திருகோணமலையில் இடம்பெறவுள்ளன. அதற்கான ஏற்பாடுகளை அவரது குடும்பத்தினரும் கிழக்கு ஆளுநரின் பிரதிநிதிகளைக்கொண்டஒருவிசேட குழுவும்ஏற்பாடுசெய்துவருகின்றன. அதற்கு முன்னதாக அவரது பூதவுடல்இன்றுகொழும்பில்மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படுகின்றது. கொழும்பு பொரளையில் ஏ.எவ். றேமண்ட் மலர்ச்சாலையில் அவரது பூதவுடல் மக்கள் அஞ்ச லிக்கு வைக்கப்பட்டிருக்கும். நாடாளுமன்றத்திலும் அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றும் நாளையும் அமர்வுகள் இருப்பதால் அதற்கான ஒழுங்குகள் தனியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## நிரந்தரமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அவசரமாகச் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு அதீவிர சிக்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று இரவு உயிரிழந்தார். இந்த தகவலைஅவரதுபுதல்வர்சஞ்சீவன் உறுதிப்படுத்தினார்.

1933ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி திருகோணமலையில் பிறந்தவர் சம்பந்தர். யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரிஆகியவற்றில்கல்விகற்றார்.

பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணியானதோடு லீலாதேவியை திருமணம் முடித்தார். அவருக்கு சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

1977 முதல் 1983 வரை நாடாளுமன்றஉறுப்பினராகஇருந்த சம்பந்தன், பின்னர் 2001 முதல் மறையும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 2015 செப்டம்பர் 3ஆம் திகதி முதல் 2018 டிசம்பர்18வரைஇவர்இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார்.

2001 ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற புதிய கூட்டணி உருவாக்கப்பட்டபோது அதன் தலைவரானார். அக்கட்சி தேர்தல் சட்டத்தில்அங்கீகரிக்கப்படாதபடியால் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டது.

சம்பந்தன் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் காரணமாக 18 ஆண்டுகளின் பின்னர் சம்பந்தன் நாடாளுமன்றத்திற்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். எனினுத் 2004ஆம்ஆண்டுதேர்தலில்தமிழர் விடுதலைக்கூட்டணியின்பெயருடன் போட்டியிடுவதற்கு ஆனந்தசங்கரி அனுமதிக்கவில்லை. இதனால் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டனர். சம்பந்தன் தமிழ் அரசுக் கட்சியின் தலவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றிலிருந்து அவர் 2004, 2010, 2015, 2020 எனத் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திற்கு திருகோணமலை தமிழ் மக்களின் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்டு வருகின்றார்.

அத்துடன், தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக திம்பு பேச்சு முதல் பல்வேறுபட்ட பேச்சுக்களில் பங்கேற்றதுடன் உலகத் தலைவர்களுடனும் சந்திப்புக்களை நடத்திய தமிழர்களின் ஒரே தலைவராகவும் திகழ்கின்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தளையில் நேற்று இடம்பெற்றமக்கள்அரண்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஒவ்வொரு தலைவர்களும் மகாநாயக்க தேரர்களைச் சந்திக்கச் சென்று அடுத்தவர்களின் குறைகளை கிசுகிசுத்தாலும், எதிர்க்கட்சியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சகல பணிகள் தொடர்பிலுமான விரிவான அறிக்கையுடனே மகாநாயக்க தேரர்களைச் சந்திக்கச் சென்றேன்.

ஜனாதிபதி நியமிக்கப்பட்டாலும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு மட்டுமே சமூகமளிக்கிறார். நான் ஜனாதிபதியாக பதவியேற்றபின்னர், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் மக்கள் பிரச்சினைகளை ஆராய ஜனாதிபதி செயலக பிரிவை நிறுவி, எந்தவொரு நபரும் எதிர்நோக்கும் பிரச்சினையையும் ஜனாதிபதியிடம் நேரடியாக முன்வைக்க சந்தர்ப்பத்தை பெற்றுத் தருவோம்.

இந்த பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்கள் தேர்தல் வாக்குறுதிகள் அல்ல என்றும், இவை அனைத்தும் ஐக்கிய மக்கள் சக்தியினால் வகுக்கப்பட்டவை.

அத்துடன், இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இந்நாட்டின் அரச வருமானம் மாத்திரம் போதாது. இதற்காக அனைத்து மூலதன நாடுகளுடனும், செல்வந்த தரப்பினரோடும் கலந்துரையாடி, எமது நாட்டுக்கான அதிகபட்ச முதலீட்டையும் நன்மைகளையும் பெற்றுத் தருவோம்.

ஸ்மார்ட் நாட்டை கட்டியெழுப்புவதில் அனைவருக்கும் தகவல் தொழில்நுட்பம் ஆற்றல் வழங்கப்பட வேண்டும். உலகில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயம் உச்சத்திற்கு சென்றுள்ளது. நெதர்லாந்து மற்றும் இஸ்ரேல் நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் நவீன தொழில்நுட்பத்துடன் விவசாயம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

ரணசிங்க பிரேமதாச ஆடைத் தொழிற்சாலை புரட்சியை முன்னெடுத்தது போல, இலத்திரனியல் பொருட்களின் உற்பத்தி, நவீன சாதனங்களைஉருவாக்கும்ஸ்மார்ட் நாட்டை நாம் உருவாக்குவோம். இங்கு கட்சி, இனம், மதம், சாதி, வர்க்கம், அந்தஸ்து முக்கியமில்லை. நாட்டைக்கட்டியெழுப்பஅனைவரும் ஒன்றிணைவோம். இந்த மாத்தளை மாவட்டத்தில் இன மத வேறுபாடின்றி, வேலையில்லாத இளைஞர்கள்சிறுதேயிலைத்தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவோம். அவர்களை தேசிய உற்பத்திக்கு பங்காளிகளாக்குவோம் என்றார்.

## பேச மட்டுமே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் எடுக்கப்பட்ட மாவட்டமாகும். கடந்த இரண்டு வருடங்களாக நாம் பல சவால்களை எதிர்கொண்டுள்ளோம்.

அப்போது நாங்கள் அரசியலில் ஈடுபடுவதை விடுத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசென்றோம். அப்போது இருந்த பிரச்சினைகளால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வது சாத்தியமில்லை என்று பலர் கூறினர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த சவாலை ஏற்று இரண்டு வருடங்களுக்குள் நாட்டை முன்னேற்றினார்.

பேச்சுக்கே மட்டுப்படுத்தப்பட்ட தலைவர்களை எதிர்வரும் தேர்தலில் தெரிவு செய்யக் கூடாது. நமது எதிர்காலத்தை வலுப்படுத்தக்கூடிய தலைவர் ஒருவர் தேவை. இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல நாம் அவருக்கு ஆதரவளிக்காமல் இருந்திருந்தால் இன்று நாட்டின் நிலைமையே மாறியிருக்கும். எதிர்காலத்தில் மக்களுக்கு நிவாரணம்வழங்கும்திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவோம். அந்த பயன்களை அடுத்த தேர்தலில் இழப்பீர்களா? இல்லையேல் இப்படியே தொடரலாமா என்று சிந்திக்க வேண்டும் என்றார்.

## இந்தியாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா விற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கொண்டு வந்துள்ளார்

## ரணிலைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடலில்புயலில்சிக்கியஇலங்கை எனும் கப்பலை மீட்க எந்த கெப்டனும் முன்வராத நிலையில், ரணில் விக்ரமசிங்க என்ற கெப்டன் கப்பலை கைப்பற்றி பாதுகாப்பாக துறைமுகத்திற்கு கொண்டு வர முடிந்தது.

இப்போது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு மீண்டும் கடலில் இறங்குவதற்கான நேரம் வந்துவிட்டது. அந்தகப்பலின்கப்டன் பதவியைரணில்விக்ரமசிங்கவிடம் திரும்ப ஒப்படைக்க உங்களால் முடியும். நன்றிக் கடன் செலுத்த நீங்கள்காத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

அடுத்த ஐந்தாண்டுகளை அவர்களுக்குகொடுத்துப்பார்க்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். இதற்காக உங்கள் வாக்குகளைப் பயன்படுத்தினால் இந்த நாடு மீண்டும் அழிவடைவதைத் தடுக்க முடியாது. இந்த நாட்டைக் காப்பாற்றக்கூடிய தலைவரையும் அழிக்கக்கூடிய தலைவரையும் இந்த நாட்டு மக்களால் மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும்.

எனவே, மக்கள் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கு வேறு மாற்றீடான பெயர்கள் இருக்கலாம். ஆனால் நாட்டுக்குவேறுமாற்றுவழியில்லை. ஒரேமாற்றுவழிரணில்விக்ரமசிங்க மட்டுமே.

எனவே அடுத்த 05 வருடங்களுக்கு ரணில் விக்ரமசிங்கவிடம் நாட்டை ஒப்படைக்கும் பொறுப்பு உங்கள் கரங்களிலே உள்ளது. மாத்தறையில் இன்று தொடங்கிய பேரணியை வெற்றியுடன் நிறைவு செய்வோம் என்றார்.

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றின் விலை 317 ரூபாவாகவும் மண்ணெண்ணெய்யின் விலை 202 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ஒன்றாக வெல்வோம் - நாம் மாத்தறை' என்றதொனிப்பொருளில் மின்சக்திமற்றும்வலுசக்திஅமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பொதுக்கூட்டத்தில் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாங்கள் கூச்சலிட்டுக் கொண்டிருக்கவில்லை. ஆனால் நாம்இந்தநெருக்கடியானகாலத்தில் பலன்களை உங்களுக்குத் தந்துள்ளோம். தற்போது நாம் எதிர்காலப் பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டியுள்ளது. ஒரே மூச்சில் அந்த நிலையில் இருந்து வெளியே வரும் பட்சத்தில் எமக்கு கடனை மீளச் செலுத்த நேரிடும். ஆனால் கடன் செலுத்தும் சக்தி எம்மிடம் இன்னும் இல்லை.

அத்துடன், முழுக் கடனையும் உடனடியாக செலுத்த வேண்டிய தேவை இல்லை. எமது முழுமையான கடனானது மொத்த தேசிய உற்பத்தியில் 108 சதவீதமாக உள்ளது. எனவே, எமக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சு நடத்தினோம். எமக்கு கால அவகாசம் தேவையெனக் கேட்டோம். ஒருபுறம், மேற்கத்தேய நாடுகள் ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுடன் பேச்சு நடத்தினோம். மறுபுறம், சீனாவுடன் பேசினோம். தற்போது இரு தரப்பினரும்

தொடர்ச்சி 9ம் பக்கம்....




காலைக்கதிர்
Kalaikkathir

# உலகின் மிகப் பெரிய சரக்கு விமானம் இலங்கை வந்தது




உலகின் மிகப் பெரிய சரக்கு விமானங்களில் ஒன்றான என்டனோவ் 124 வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதிப்பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கையின் படையினருக்கு எம்ஐ 17 ஹெலிகொப்டர் ஒன்றை கொண்டு செல்வதற்காகவே இந்த விமானம் இலங்கைக்கு வந்தது.

2014 ஆம் ஆண்டு முதல் மத்திய ஆபிரிக்க குடியரசில் அமைதி காக்கும் பணிகளில், இலங்கையின் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் (05)

# வீதியில் சென்றோரிடம் வாள்களை காட்டி மிரட்டி நகைகள் கொள்ளை

## நகை கடை உரிமையாளர் உட்பட நால்வர் கைது

வீதிகளில் பயணிப்பவர்களிடம் வாள்களை காண்பித்து அச்சுறுத்தி நகைகளை கொள்ளையிடும் கும்பலுடன் தொடர்புடைய நகை கடை உரிமையாளர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

மரதகஹமுல பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் நீண்ட காலமாக வீதிகளில் பயணிப்பவர்களிடம் வாள்களைக் காண்பித்து அச்சுறுத்தி நகைகளை கொள்ளையிடும் கும்பல் தொடர்பில் திவுலப்பிட்டிய பொலிஸார் விசாரணைகள் நடத்தி வந்துள்ளனர். இந்நிலையில், பல்லியப்பிட்டிய பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், இரண்டு தங்க சங்கிலிகளை கொள்ளையிட்டு தப்பிச் செல்வதாக திவுலப்பிட்டிய பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளை துரத்திச் சென்ற போது சந்தேக நபர்கள் இருவரும் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளானது படல்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்து லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பின்னர், பிரதேசவாசிகளின் உதவியுடன் சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விபத்தின் போது சந்தேக நபர்கள் இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீரிகம மற்றும் ஜா - எல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இந்த கொள்ளை கும்பலுடன் தொடர்புடைய நகை கடை உரிமையாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து, இரண்டு வாள்கள் , கொள்ளையிடப்பட்டன எனக் கூறப்படும் நகைகள் மற்றும் கைக்குண்டு உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மன்னார் – மடு வீதியில் விபத்து: ஒருவர் சாவு 'ஒருவர் காயம்

மன்னார் - மடு பிரதேச செயலாளர் பகுதியிலுள்ள இரண்டாம் கட்டைப் பகுதியில் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் காயமடைந்த மற்றைய நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மடு ஜோதிநகர் இரண்டாம் கட்டை பாலத்தின் அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் விபத்துக்குள்ளானதில் 35 வயதுடைய நபர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் - மன்னார் பெரியகமம் பிரதேசத்தில் வசித்து வரும் இளம் குடும்பஸ்தர் எனத் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர் முருங்கன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்த நபர் பண்டிவரிச்சான் பகுதியை சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(05)

# கோழி எரு ஏற்றிச் சென்ற லொறி வீழ்ந்தது பள்ளத்தில்

## தந்தை, தாய், இரு பிள்ளைகள் காயம்



கண்டி, பதியபெலெல்ல, மந்தாரம்நுவர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கோழி எருவை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வீதியின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்ததில் 300 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது, லொறியின் சாரதியும் சாரதியின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)

# மன்னாரில் ஆமணக்கு விதைகளை உண்ட எட்டு மாணவர்கள் வைத்தியசாலையில்

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் தரம் 4 ஐச் சேர்ந்த மாணவர்கள் 8 பேர் திடீர் சுகவீனம் காரணமாக வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 4 இல் கல்வி கற்கும் 9 வயதுடைய 8 மாணவர்கள் இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் தனது வீட்டில் எண்ணெய் எடுப்பதற்காக காய வைத்திருந்த ஆமணக்கு விதைகளை பாடசாலைக்கு கொண்டு வந்து சக மாணவர்களுடன் அதை உட்கொண்ட நிலையிலே குறித்த மாணவர்கள் திடீர் சுகவீனமடைந்து உள்ளதாக தெரியவந்துள்ளது .

இந்த நிலையில் குறித்த 8 மாணவர்களும் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது . (05)

# தயிரிலிருந்து எடுக்கப்பட்ட புரதங்களென கடத்தப்பட்ட போதைப்பொருட்கள் மீட்பு






சரக்கு விமான சேவைகள் மூலமாக நாட்டுக்கு அனுப்பப்பட்ட 18 கோடி ஷரூபா பெறுமதியான கொக்கைன் மற்றும் குஷ் ஆகிய போதைப்பொருள்கள் வெள்ளிக கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த போதைப்பொருள்கள் தயிரில் இருந்து எடுக்கப்பட்ட புரதங்களின் பவுடர் என கூறி அனுப்பப்பட்டுள்ளது.

சீதுவையில் உள்ள வெளிநாடுகளுக்கு பொதிகள் அனுப்பும் சேவை நிறுவனம் ஒன்றிலிருந்து இந்த போதைப்பொருள்கள் சுங்க திணைக்கள போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அவற்றில், 2 கிலோகிராம் 30 கிராம் கொக்கைன் மற்றும் 2 கிலோகிராம் 177 கிராம் கஞ்சா வகை குஷ் போதைப்பொருள்கள் இருந்தன என சுங்க ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் மொத்த பெறுமதி 18 கோடியே 56 லட்சத்து 40 ஆயிரம் ஷரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த போதைப்பொருள் பொதிகள் கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கடவத்தை மற்றும் கொழும்பு ஆகிய இரண்டு முகவரிகளுக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அந்த முகவரிகள் போலியானவை என உறுதிப்படுத்தப்பட்டதாகவும் மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருள் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் சுங்க திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஈடு செய்ய முடியாத பேரிழப்பு

தன்னுடைய காலத்திற்குள் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்றுத் தந்துவிடவேண்டும் என்று ஓயாது பாடுபட்ட ஒரு குரல் ஓய்ந்துவிட்டது. மீளாத் துயில் கொண்டுவிட்டது. பெருந்தலைவர் இரா.சம்பந்தரின் இழப்பு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாக அமைந்துவிட்டது. அவரது இடத்தை இன்றிருக்கும் எந்தவொரு தமிழ்த் தலைவராலும் இனியொருபோதும் ஈடுசெய்யமுடியாது.

1933ஆம் ஆண்டு மாசி 5 திருகோணமலையில் பிறந்தவர் சம்பந்தர். யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றிருக்கிறார். பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணியானார். லீலாதேவியை திருமணம் முடித்தார். அவருக்கு சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

1977 முதல்தடவையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். 1983 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அதன் பின்னர் தமிழர் ஆயுதப் போராட்டம் தீவிரம் பெற்று மக்களாட்சியின் மீதும் நாடாளுமன்றத்தின் மீதும் தமிழ் மக்கள் முழுதாக நம்பிக்கையிழந்து ஆயுதங்களை மட்டுமே நம்பியபோது, செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கினார். பின்னர் ஆயுதங்களைத் தாண்டிய போராட்ட வடிவங்களும் தேவை என்கிற ஞானம் தமிழர்களுக்கு ஏற்பட்டபோது, 2001 மீண்டும் செயற்பாட்டு அரசியலுக்கு வந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தார்.

புலிகள் ஆயுதப் போராட்டக் களத்திலும் கூட்டமைப்பு நாடாளுமன்றக் களத்திலும் தத்தமது பங்கு பணியை முன்னெடுப்பதற்கான இணக்கத்தை ஏற்படுத்திக்கொண்டார். மூத்த அரசியல் தலைவராக இருந்தபோதும் தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு, அவர்களின் குரலாக நாடாளுமன்றத்தில் செயற்பட்டார். அப்போது முதல் மறையும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக தமிழர்களின் விடிவிற்காகப் பாடுபட்டார்.

2015 புரட்டாதி 3 முதல் 2018 மார்கழி 18 வரை இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார். எதிர்க் கட்சித் தலைவராக இலங்கையில் பதவி வகித்த இரண்டாவது தமிழ்த் தலைவரானார்.

அவரது ஒரே நோக்கம் தனது வாழ்நாளுக்குள் தமிழர்களுக்கு ஓர் அரசியல் தீர்வைப் பெற்றுத் தந்துவிடவேண்டும் என்பதாகவே இருந்தது. அதனால் கொழும்பு அரசியலுடன் முடிந்தவரையில் விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்பட்டு வந்தார். வடக்கு கிழக்கு இணைப்பும் கூட்டாட்சியுமே (சமஷ்டி) அவரது இலக்காக இருந்தன. அதற்காக அந்தச் சொற்களிலேயே பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கவும் அவர் விரும்பவில்லை. பெயர் என்னவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும் உள்ளே கூட்டாட்சிப் பண்பியல்புகளைக் கொண்ட ஒரு தீர்வையாவது பெற்றுவிடவேண்டும் என்று அவர் காட்டிய முயற்சி அவருக்கு மற்றைய தமிழ்க் கட்சிகளிடம் இருந்து பெரும் அவப் பெயரை ஏற்படுத்தியது. அவருடன் கூட்டமைப்பாகக் கூட இருந்தவர்களே சுயநல அரசியலுக்காக அவரைக் காட்டிக்கொடுத்தார்கள். வசைபாடினார்கள்.

இருந்தாலும் துவண்டுபோய்விடாத, தனது உரிமைக் குரலைத் தளர்த்திவிடாத ஒரு அரசியல் தலைவராக அவர் தன்னை நிலைநிறுத்தி வைத்திருந்தார். எந்தப் பெரிய அரசியல் தலைவராக இருந்தாலும் வல்லாதிக்க சக்திகளாக இருந்தாலும் தனது அரசியல் கருத்துக்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக ஆணித்தரமாக எடுத்துக்கூறக்கூடிய ஒரே தலைவராக அவர் இருந்தார். தன்னுடைய நிலைப்பாடுகளில் அவர் எப்போதும் இரட்டைவேடம் போட்டதில்லை. தந்தை செல்வாவின் கொள்கைகளிலும் அவரது கோரிக்கைகளிலும் இருந்து பின்வாங்குவதில்லை என்கிற முடிவிலும் அவர் ஒருபோதும் மாறுபட்டதில்லை.

தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக திம்பு பேச்சு முதல் கடைசியாக மைத்திரி – ரணில் நல்லாட்சியுடன் புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான முயற்சி வரை தமிழர்களின் அரசியல் தீர்வில் மிக நீண்ட அனுபவத்தையும் பட்டறிவையும் கொண்ட ஒரு தலைவரை தமிழ் மக்கள் இழந்திருக்கிறார்கள். அந்த இழப்பு ஈடுசெய்ய முடியாதது. தற்போது இருக்கும் தமிழ்த் தலைவர்களில் எவராலும் அவரது இடத்தை ஈடுசெய்ய முடியாது என்பது சர்வநிச்சயம். அவரது வயதும் அனுபவமும் சிங்களத் தலைவர்கள் மத்தியிலும் மதிப்புக்குரியதாகப் பார்க்கப்பட்டது. சிங்கள மக்களும் நன்கறிந்த தமிழ்த் தலைவராகவும் அவரே இருந்தார். உலகத் தலைவர்களுடனும் சந்திப்புக்களை நடத்திய தமிழர்களின் ஒரே தலைவராகவும் திகழ்கின்றார். அத்தகைய ஒரு தலைவரை இழந்து பரிதவிக்கும் தமிழ் மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. இந்த இழப்பிலிருந்து மீண்டுவர தமிழர்களுக்கு நீண்ட காலம் பிடிக்கும்.

# ஜூலியன் அசாஞ்சேயின் விடுதலை கருத்துச் சுதந்திரத்தின் வெற்றியா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




2012களில் உலகரசியலில் அதிர்வை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே மேற்குலகின் அட்டூழியங்களையும், அத்துமீறல்களை வெளிப்படுத்தியவர் ஜூலியன் அசாஞ்சே. அவரின் மீதான கைதானது, அமெரிக்க அரசின் செயற்பாடு ஊடக கருத்துச் சுதந்திர மீறலாகவும் கருதலாம். ஆயினும் மேற்குலகின் அரச ரகசியங்களை காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. சுயாதீன கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்ட ஜூலியன் அசாஞ்சே தற்போது விடுதலையாகி உள்ளார்.

ஈராக் போரில் பாக்தாத்தில் அமெரிக்கா நடத்திய வான் தாக்குதலில், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த நிருபர் கொல்லப்பட்டது உள்பட பல தகவல்கள் ஜூலியன் அசாஞ்சே (Julian Assange) வெளியிட்ட ஆவணங்களில் இருந்தன.

இவற்றில் பல விஷயங்கள் ஆட்சியாளர்களின் அத்துமீறல்களையே வெளிக்கொணர்ந்தன.

இரகசியம் என்று அரசுகளால் அறிவிக்கப்படும் கோப்புகளிலிருந்து தகவல்களைப் பெற்று வெளியிடும் பத்திரிகையாளர்களின் முயற்சிகளுக்குப் பெரிய தடையாக அமைவது போலியான குற்றச் சாட்டுக்களும் அடக்குமுறைகளுமே.

ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசமைப்புச் சட்டங்களுக்கும்கூட அப்பாற்பட்டு அரசு எனும் அமைப்பைமோசமாகக்கையாளும்ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் ஊடகர்களுக்கு என்ன வகையான சட்டபூர்வப் பாதுகாப்பு உலகில் உள்ளது ?




### பாக்தாத்தில் அமெரிக்கா தாக்குதல்:

அமெரிக்க ராணுவம் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடத்திய தாக்குதல் தொடர்பான பல ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையதளத்தில் கடந்த 2010-ம் ஆண்டு வெளியிட்டார் அதன் நிறுவனரான ஜூலியன் அசாஞ்சே. இதனால் உடனடியாக விக்கிலீக்ஸ் மீது குற்ற விசாரணையை அமெரிக்கா தொடங்கியது.

உடனடியாகவிக்கிலீக்ஸ்மீதுகுற்றவிசாரணையை வேறு முனையில் திசை திருப்பி அமெரிக்கா தொடங்கியது.

இங்கிலாந்தில் இருந்த ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தி, அவருக்கு கைது வாரன்ட்டை சுவீடன் அரசு மூலம் பிறப்பித்தது. இது அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் முயற்சி என ஜூலியன் அசாஞ்சே குற்றம்சாட்டினர்.

அமெரிக்க வெளியுறவுத் துறை அலுவலகம் மற்றவர்களுடன் வைத்திருந்த தொடர்பு, மின்னஞ்சல் தொடர்பு அனைத்தையும் அசாஞ்சே பொதுவெளியில் வெளியிட்டார். இதனால் ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவுக்கு விசாரணைக்காக நாடு கடத்தப்படலாம் என பிரிட்டன் அரசு முன்பு தெரிவித்திருந்தது.

ஆயினும் இந்த நீண்ட கால வழக்கில் தோல்வியைச் சந்தித்த ஜூலியன் அசாஞ்சே ஜாமீன் விதிமுறைகளை மீறி, லண்டனில் உள்ள ஈக்குவடார் தூதரகத்தில் கடந்த 2012-ம் ஆண்டு தஞ்சம் அடைந்தார். 2019-ம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்ட அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு வாபஸ் பெற்றது. அதன்பின் ஜூலியன் அசாஞ்சேவை இங்கிலாந்து போலீசார் கைது செய்து லண்டன் சிறையில் அடைத்தனர்.

மேற்குலக அரசுகள் மீது உளவு பார்த்ததாக ஜூலியன் அசாஞ்சே மீது 17 குற்றச்சாட்டுகள் உள்ளதால் அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அதிகாரிகளிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது. அமெரிக்க சிறையின் கடுமையான சூழலைச் சந்திப்பது, தன்னை தற்கொலைக்கு தூண்டும் என ஜூலியன் அசாஞ்சே தரப்பில் கூறப்பட்டதால், முதலில் அமெரிக்காவின் கோரிக்கையை லண்டன் நீதிமன்றம் நிராகரித்ததும் அறிந்ததே.

### அவுஸ்திரேலியாவில் பிறந்தவர் :

அவுஸ்திரேலியாவில் பிறந்தவரான அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டு தூதரகத்தில் 2012-ல் தஞ்சம் புகுந்த பின், இராணுவ அரச ரகசியங்களை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முதலில் அவரை சுவீடனிலும் பிறகு அமெரிக்காவிலும் விசாரிக்க முற்பட்டனர். பின்னர், சுவீடன் அரசு தனது வழக்கைக் கைவிட்டுவிட்டது.

ஜூலியன் அசாஞ்சே கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறார் என்று அவருடைய வழக்குரைஞர் தெரிவித்திருப்பதும், அவருடைய உடல்நலம் குன்றிக் கொண்டேவருவதும் ஜனநாயகத்துக்காக இப்படிச் செயலாற்றும்



விசிலூதிகளின் (Whistle Blowers) பாதுகாப்பு தொடர்பாக தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. கூடவே நவீன சமூகத்தின் நாகரிக எல்லைகளின் போதாமையையும் இது சுட்டிக்காட்டுகிறது.

அமெரிக்காவின் முகத்திரையை கிழித்துக் காட்டியதால், உடனடியாக சர்வதேச அழுத்தங்களின் கீழ் கொண்டுவரப்பட்ட அவர், இப்போது பிரிட்டன் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். தன்னை அமெரிக்கா வசம் ஒப்படைத்துவிடக் கூடாது, அது தன் உயிருக்கு ஆபத்து என்று கோரி நீதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார் அசாஞ்சே.

லண்டன் உயர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்துவந்தது. அமெரிக்க அரசிடம் அசாஞ்சேவை ஒப்படைத்துவிடலாம் என்று ஊகிக்கப்பட்டது.

### உலக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியவர் :

உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு வந்தபோது அமெரிக்கஅரசுசார்பில்அளிக்கப்பட்ட உறுதிமொழியை அது ஏற்றது. அசாஞ்சேவை தனிமைச் சிறையிலோ, கொலராடோவில் உள்ள சூப்பர்மேக்ஸ் சிறையிலோ அடைக்க மாட்டோம் என்று அமெரிக்க அரசு உறுதியளித்தது.

அத்துடன் வழக்கு விசாரணைக்குப் பிறகு




தண்டனையைஅவர்அவுஸ்திரேலியசிறைகளில்கூட அனுபவிக்கட்டும் என்றும் அமெரிக்க அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதன் விளைவாக அமெரிக்கத் தரப்பை ஏற்றுக்கொண்டது நீதிமன்றம்.

அரச ரகசியம் என்ற சொல்லாடலின் கீழ் எதையெல்லாம் மக்கள் பார்வையிலிருந்து மறைத்துவைக்க முடியும்? காலனிய கால அணுகுமுறையின் நீட்சியாகவும் கடந்துவந்த நூற்றாண்டுகளின் பார்வையையும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தூக்கிச் சுமக்கப்போகிறோம்?

### நீண்ட சட்டப் போராட்டம்:

இந்த நீண்ட சட்டப் போராட்டம் நீடித்தால் அது அசாஞ்சேவுக்கும் ஆயுளைப் பாதித்தது. ஊடகர்கள் நவீன சமூக முன்னேற்ற செயல்பாட்டின் முக்கியமான அங்கங்கள் ஆவர். அவர்களுடைய உயிர்ப்பான செயல்பாடு ஜனநாயகத்துக்கு முக்கியம். எவ்வாறாயினும் அசாஞ்சே சட்ட ரீதியாக விடுவிக்கப்பட்டமை ஊடக சுதந்திரத்தின் வெற்றி என்றே கருதலாம்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க கானகப் பாதை கிழக்கு ஆளுநரால் திறப்பு.







(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6.30மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பூநாடா வெட்டி கானகப் பாதைக்கான கதவை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

வரலாறு காணாத வகையில் இம்முறை சுமார் 4000 க்கு மேற்பட்ட அடியார்கள் முதல் தடவையாக முதல் நாளிலேயே காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்து சமய கலாசார முறைப்படி மூன்றாவது தடவையாக கழுகுமலைப் பத்து பாடி பிரதம குரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் பஞ்சாரத்தி காட்டியதும் கானகப்பாதைக் கதவு திறந்து வைக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணிக்கு உகந்தை மலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவஸ்ரீ க.கு. சீதாராம் குருக்கள் விசேட பூஜை நடாத்தி ஆசியுரை வழங்கினார்..

காலை 7 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்பட்டது.

அவ்வமயம் , அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம,மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் எந்திரி பி.இராசமோகன்,லாகுகலை பிரதேச செயலாளர் என்.நவநீதராஜா ,மொனராகலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ,ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க , காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் இந்து சமய செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பல அன்பர்கள் கலந்து கொண்டார்கள்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா(ஜெயா வேல்சாமி) தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் உள்ளிட்ட 4 ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் ஆகும்.

உகந்தையிலிருந்து ஐந்து மைல்தூரத்தில் வாகூரவட்டை .பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது .

சுமார் 6 நாள்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை.

நேற்று 30 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை ஜூலை 11 ஆம் திகதி மூடப்படுகிறது.

கதிர்காம கொடியேற்றம் 06ஆம் திகதி நடைபெற இருக்கின்றது . ஜூலை மாதம் 22ஆம் திகதி தீர்த்தம் இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

கதிர்காமப் பாதயாத்திரை அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம் என்று 'ஷேத்திராடனம்' எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# புத்தளத்தில் மின்சார வேலியில் மாட்டிய கொம்பன் யானை சாவு





புத்தளம் மஹாகும்புக்கடவல பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொஹம்பகஸ்வெள பகுதியில் கொம்பன் யானையொன்று மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளது.

சனிக்கிழமை காலை மின்சார வேலியில் சிக்குண்ட நிலையில் கொம்பன் யானையொன்றின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இந்த யானை தனியார் காணியொன்றிலேயே உயிரிழந்துள்ளது.

வீட்டிலிருந்து சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்று, யானைக்காக இடப்பட்ட தடுப்புவேலி யில் இணைத்தமையாலேயே இந்த கொம்பன் யானை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானை சுமார் 8 அடி உயரமுடையது எனவும் 30 வயது மதிக்கத்தக்கது எனவும் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதன்போது தனியார் காணி உரிமையாளர் வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு, ஆனமடுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த யானைக்கு நிக்கவெரெட்டிய மிருக வைத்தியர் இசுருவினால் உடற்கூற்று பரிசோதனை நடத்தப்படவுள்ளது. (05)

# மூன்று ஆண்டுகளாக சிறுமிக்கு துன்புறுத்தல்

## தந்தை கைது

தந்தையொருவர் தனது மகளை மூன்று ஆண்டுகளாக பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் வத்தளை, உஸ்வட்டகெய்யாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உஸ்வட்டகெய்யாவ பிரதேசத்தில் வசிக்கும் 18 வயதுடைய மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் மூத்த மகளே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான மகள் இது தொடர்பில் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் -

எனது தந்தை கடந்த மூன்று ஆண்டுகளாக என்னை பாலியல் துஷ்பிரயோகத்துக்குப்படுத்தி வந்தார். நான் எனது 15 வயதைக் கடந்த பின்னரே இந்த சம்பவத்துக்கு முகம் கொடுத்தேன்.

நான் இது தொடர்பில் நெருங்கிய பெண்ணொருவரிடம் தெரிவித்ததையடுத்து அந்த பெண் இது தொடர்பில் பமுணுகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தார்.

இதன்போது, எனது தாய் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை மீள திரும்பப்பெறுமாறு என்னைக் கட்டாயப்படுத்தினார்.

பின்னர், நான் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை மீள திரும்பப்பெற்றதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எனது தந்தை விடுதலை செய்யப்பட்டார்.

எனது தந்தையின் அச்சுறுத்தல் காரணமாக நான் எனது வீட்டை விட்டு வெளியேறி வேறொரு வீட்டில் வசித்து வருகிறேன் எனத் தெரிவித்துள்ளார். (05)

# நீதிமன்றுக்கு அழைத்துச் சென்ற இரு கைதிகள் தப்பியோட்டம்

குருவிட்ட சிறைச்சாலையில் உள்ள இரண்டு கைதிகள் வரக்காபொல துல்ஹிரிய நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ளனர் என வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

களுத்துறை, கோனபொல பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரொருவரும் ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவருமே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்ற இரு கைதிகளுக்கு எதிராக பெல்மடுல்ல, அத்தனகல்ல, ஹொரணை மற்றும் வரக்காபொல ஆகிய நீதிமன்றங்களில் பல வழக்குகள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வரக்காபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகநாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

முதலில் மல்வத்து விகாரைக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் மல்வத்து பீட மகாநாயக்க வண. திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

இதன் பின்னர், அஸ்கிரி மகா விகாரைக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர், அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க வண. வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரையும் சந்தித்து ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆற்றிவரும் சேவைகள் தொடர்பாக மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகா நாயக்க தேரர்களைத் தெளிவூட்டும் முகமாகவே இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஏமாற்றுவதற்கும், நாட்டு மக்களுக்கு பொய்யுரைப்பதற்குமே ஜனாதிபதி ஜூலை 2ஆம் திகதி பாராளுமன்றத்தை கூட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயல்படும்.

எமது ஆட்சியின் போது இங்கு எட்டப்படும் இணக்கப்பாடு மக்களை மையமாகக் கொண்ட, சமூகத்திற்கு தீங்கு விளைவிக்காத மனிதாபிமான முற்போக்கான இணக்கப்பாடாக அமையும். இது சாதாரண மக்களை ஒடுக்கும் இணக்கப்பாடாக அமையாது. மக்களை வெற்றிபெறச் செய்யும் உடன்பாடாக அமையும்.

நாடே வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், குறிப்பிட்ட சிறிய தரப்பினரே வங்குரோத்தான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்கள் என்பன வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உயரியபட்சமாக பேணியே எவ்வேளையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இயலாமையோடு வெறும் வாய் சொல்லால் வீராப்பு பேசி வரும் தரப்பினரே இந்த வேலைத்திட்டங்களை கண்டு விமர்சித்து வருகின்றனர் என்றார்.

## ரணிலே ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் அதிகளவான பயனாளிகள் மொனராகலை மாவட்டத்தில் உள்ளார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளாக நீங்கள் காத்திருந்த உங்கள் உரிமை இன்று உங்களுக்குகிடைத்துள்ளது. இப்பகுதியின் 60 சதவீத உற்பத்திகள் பிற மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அது அதிக சதவீதம்.

இவ்வளவு பாரிய பணிகள் நடைபெற்று வரும் மாவட்டம் என்பதால், அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் பொருளாதார மையம் அமைக்க திட்டமிட்டிருந்தும், அதை நிறைவேற்ற முடியவில்லை.

புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதற்குத் தேவையான ஏற்பாடுகளை எதிர்வரும் வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்குவீர்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

## தேர்தல்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எமக்கு கடனை செலுத்தாமல் இருக்க 5 வருட கால அவகாசம் இருக்கிறது. அதன் பின்னர் 2042ஆம் ஆண்டுவரை கடன் செலுத்தவேண்டியுள்ளது. அத்துடன் செலுத்த வேண்டிய தொகையும் குறையும். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தை முன்னெடுத்தால் இந்த சலுகைகளைப் பெற முடியும் என்று எமக்கு அறிவிக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்துடன் இணங்கி, அந்த வேலைத்திட்டத்தைமுன்னெடுப்பது என்ற இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளோம். இந்த இரண்டு இணக்கப்பாடுகளையும் நாம் எட்டியுள்ளோம்.

இவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன். இதனைத்தவிர, எமக்கு கடன் வழங்கியநாடுகளைத்தவிரபிணை முறிகள்மற்றும்தனியாரிடமிருந்தும் நாம் உத்தியோகபூர்வமாக கடன் பெற்றுள்ளோம். இணக்கப்பாடு எட்டப்பட்ட பின்னர், பிணை முறிகளுக்கு கடன் வழங்கிய தரப்பினர்எம்முடன்பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்துள்ளனர். தற்போது அதையும் நாம் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறோம். இந்தப் பேச்சுவார்த்தைகளையும் அடுத்த வாரம்வெற்றிகரமாகநிறைவுசெய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

இந்த மூன்று உடன்படிக்கைகளையும் சேர்த்துக் கொள்வோம் என்று அரச நிதி தொடர்பான பாராளுமன்றக் குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாவிடம் கோரிக்கை விடுத்தேன். இது குறித்து விரிவாக நான் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றைநிகழ்த்தவுள்ளேன். இவற்றை அரச நிதி தொடர்பான குழு ஆராய்ந்த பின்னர் வாக்கெடுப்பிற்கு செல்வோம் என்று நான் கூறியுள்ளேன். பாராளுமன்றத்தில் உள்ளகட்சிகள்இதற்குஆதரவளிக்க வேண்டும். இதனை நாம் ஏற்றுக் கொள்கிறோமாஇல்லையாஎன்பதை உலகம் அறிய விரும்புகிறது.

எனவே, நான் இவற்றை சமர்ப்பிக்கிறேன். இதனைவிட சிறந்த தீர்வோ, மாற்றுவழியோ இருக்கிறது என்று எந்தவொரு கட்சியாவதுகூறினால்,அவர்களுக்கு வொஷிங்டன் சென்று ஐ.எம்.எப். உடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும். அவர்களுக்கான பயணச் சீட்டையும், தங்குமிட வசதிகளையும் அரசாங்கம் ஏற்பதற்கு தயாராக இருக்கிறது. அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி சிறந்த தீர்வைக் கொண்டுவந்தால்அதுகுறித்தும்நாம் பாராளுமன்றத்தில்கலந்தாலோசிக்க முடியும்.

இதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. எனினும், பழைய முறையில் அரசியல் செய்ய முடியாது. நாம் எடுக்கும் தீர்மானம் எங்கள் எதிர்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதிலிருந்து நாம் விலகிச் சென்றால், நாம் எவ்வாறு தனித்துப் பயணிக்கப் போகிறோம் என்ற கேள்வி இருக்கிறது.

இந்த உடன்படிக்கைகள் இல்லாமல் நாட்டை முன்நோக்கி நகர்த்த முடியுமா? இந்த உடன்படிக்கைகள் இல்லாமல் எமக்கு எதிர்காலம் இருக்கிறதா? அல்லது வரிசை யுகத்திற்கு மீண்டும் செல்வதா? இந்தக் கேள்விகளுக்கு விடை காண வேண்டும். இந்த சம்பிரதாய அரசியலில் இருந்து விடுபட வேண்டும். தீர்க்கமான தீர்மானமொன்றை நாம் எடுக்க வேண்டும்.

அதுமட்டுமன்றி, எதிர்காலத்தில் இறக்குமதிசெய்யும்பொருட்களுக்கு நாம் எவ்வாறு பணம் செலுத்தப் போகிறோம்? எரிபொருளுக்கு பணம் செலுத்தப் போகிறோம்? எங்களுக்கு அந்நியச் செலாவணி இல்லையென்றால், நாம் கடன் பெறப்போகிறோமா? அப்படி செய்தால்இன்னும்15வருடங்களில் எழுந்துவர முடியாத, பழிகுழியில் மீண்டும் விழுவோம் என்பதை நான் உறுதியாக கூறிவைக்க விரும்புகிறேன்.

இதனை நான் எழுதித் தருகிறேன். இதனை செய்யப் போகிறோமாஅல்லதுநாம்ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கிப் பயணிக்கப் போகிறோமா? நாம் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு செல்ல வேண்டும். உங்களது எதிர்காலத்தை மையப்படுத்தியே இந்தத் தீர்மானங்கள் எடுக்க வேண்டும்.

அடுத்த 5 - 10 வருடங்களில் உங்களின் வாழ்க்கை எவ்வாறு இருக்கிற வேண்டும் என்பதை மையப்படுத்திதீர்மானங்கள்எடுக்க வேண்டும். இளைஞர்களுக்காக இந்தத் தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு சிறந்தஎதிர்காலம்இருக்கவேண்டும். மீண்டும்நெருக்கடிக்குள்செல்வதா அல்லது அபிவிருத்தியடைந்த நாடாக முன்நோக்கிச் செல்வதா என்பதைத்தீர்மானிக்கவேண்டும். இளைஞர்களின் எதிர்காலமே இதில் தங்கியுள்ளது. இந்தத் தீர்மானங்களை நாம் எடுக்க வேண்டும்.இதற்காகவேநாட்டிற்காக பணியாற்றுவோம்என்றுஅனைத்து அரசியல் தலைவர்களுக்கும் நான் கூறுகிறேன்.

நான் அடங்கலாக இந்த அமைச்சரவை எந்தக் கட்சிக்குச் சொந்தமானது எனக் கேட்கின்றனர். நாட்டிற்காக ஒன்றுபட்டவர்களே இதில் இருக்கின்றனர். இதில் மொட்டுக்கட்சியினர்இருக்கின்றனர், சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் இருக்கின்றனர்,டக்ளஸ்தேவானந்தா அமைச்சரின் கட்சியைச்சேர்ந்தவர்கள்இருக்கின்றனர், ஐக்கிய தேசியக் கட்சியினர் இருக்கின்றனர். நாம் நாட்டிற்காகஒன்றிணைந்துள்ளோம். எமக்கென்று ஒரு கட்சி இல்லை. வெவ்வேறுகட்சியைச்சேர்ந்தவர்கள் இருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். புதியஅரசியல்முறைமையொன்றை நாம் ஆரம்பித்துள்ளோம். நாட்டிற்கு முதலிடம். அதன்பின்னரே கட்சி. மொட்டுக் கட்சியினர் உள்ளிட்ட பல தரப்பினரும் எதிர்கட்சியிலும் இருக்கின்றனர். ஆனால் நாட்டிற்காக சிந்தித்து பணியாற்றும் பலரே தற்போது அரசாங்கத்தில் இருக்கின்றனர். நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். இந்தப் பணத்தில்நாம்தொடர்ந்துபயணிக்க வேண்டும்.

எம்முடன் இணைந்துகொள்ளுமாறுஎதிர்க்கட்சித்தலைவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த நாடாளுமன்றத்தில் ஒரு ஆளும்தரப்பை அமைத்துக் கொள்ள முடியும். ஆனால் நாம் இந்தப் புதிய பாதையில் பயணிக்க வேண்டும். எதிர்க்காலத்தில் தலைமைத்துவத்தை எவ்வாறு பெறுவது? எவ்வாறு இந்தப் பணிகளை முன்னெடுப்பது என்று என்னிடம் கற்றுக்கொள்ளவும் முடியும். அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசியல் முறையை மாற்றுவோம். தினமும் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதில் பலனில்லை. நான் அவ்வாறு செய்யவில்லை.நாம்புதியபாதையில் பயணிக்கிறோம். இதற்காக அர்ப்பணிக்க வேண்டும். நான் அதற்காக அர்ப்பணித்துள்ளேன்.

அடுத்ததேர்தலில்என்னசெய்யப் போகிறோம்என்பதைஅனைவரும் பேசித்தீர்மானிக்கலாம். ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலைஎவ்வாறுசந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அந்தத் தீர்மானங்களுக்குஇணங்கசெயற்படநானும்தயார். எங்களுக்கு இன்று தனிநபர், கட்சி சார்ப்பு அரசியல் இல்லை. நாம் நாடு குறித்து சிந்திக்க வேண்டும். நாட்டை முன்னிலைப்படுத்தி முன்நோக்கிப் பயணிப்போம் என்று கூறவிரும்புகிறேன்.

இந்த வருடமும், அடுத்த வருடமும்தேர்தல்கள்வருகின்றன. ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. பாராளுமன்றத் தேர்தல் வருகிறது. அதன்பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடைபெற இருகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த பணம் இல்லை.. அதனால் அதனை இறுதியாக நடத்துமாறு கோரினார்கள்.அதுகுறித்துகூச்சலிடத் தேவையில்லை. ஊர்வலம் வர முன்னர் மேளதாளங்கள் அவசியமில்லை. இதுகுறித்தும் நாம் தீர்மானிக்க வேண்டும்.

எவ்வாறாயினும்,நாம்எதிர்காலம் குறித்துசிந்தித்துபணியாற்றுவோம். அண்மைக்காலமாக நீங்கள் பட்ட துன்பம்குறித்துகவலையடைகிறேன். இந்த அரசாங்கம் அது தொடர்பில் கவலைகொள்கிறது. அடுத்ததாக நாம் எடுத்த தீர்மானங்களை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனைப் பாதுகாத்துக் கொள்ள ஒன்றிணையுமாறு நாம் அனைவரையும் அழைக்கிறேன். எதிர்காலத்தில் புதிய பாதையில் பயணிக்கவருமாறுஅனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளால் நீதி வேண்டி கிளிநொச்சியில் போராட்டம்








கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சர்வதேச நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் படங்களையும் தாங்கியவாறும் குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்திற்கு முன்பாக ஏ - 9 வீதியில் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். காலை 10 மணி முதல் அரை மணித்தியாலங்கள் வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்களைகளுக்கு சர்வதேச நீதி தேவை பொது வேட்பாளர் சரியான ஒருவர் நியமித்தால் தாம் பூரண ஆதரவு வழங்குவதாக வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க தலைவி யோ. கனகரஞ்சி தெரிவித்தார். (05 - 113)

# லொறி கவிழ்ந்து விபத்து' மூவர் காயம்

அநுராதபுரம் - கலென்பிந்துனுவெள வீதியில் அஸ்வயாபெத்தீவெள மயானத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

வீதியில் பயணித்த லொறி ஒன்றின் சக்கரமொன்றில் காற்று வெளியேறியதால் லொறியானது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது லொறியில் பயணித்த மூன்று பேர் படு காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் கலென்பிந்துனுவெள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)

# பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம் மூத்த சகோதரன் பொலிஸார் கைது

16 வயது சகோதரியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் மூத்த சகோதரன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹோமாகம பொலிஸ் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஹோமாகம தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (05)



# திருக்கோனேச்சர் ஆலயத்தின் கடைக்கு முத்திரை வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் கோவிலை அண்மித்த கடைத்தொகுதி ஒன்றில் தடை செய்யப்பட்ட கசிப்பு ரக மதுபானம் விற்பனை செய்யப்பட்ட கடை, திருகோணமலை நகரசபையினரால் முத்திரை குத்தப்பட்டு பூட்டப்பட்ட சம்பவத்தின் போது நகரசபை ஊழியர் ஒருவர் அடையாளந் தெரியாத நபர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் திருகோணமலை - திருகோணேஸ்வர ஆலயத்தை அண்மித்த கடை ஒன்றில் தடை செய்யப்பப்பட்ட கசிப்பு வகை மதுபானம் விற்பனை செய்ததாகக் கருதப்பட்டு குறித்த கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று குறித்த கடைக்கு முத்திரை குத்தி பூட்டப்பட்டதாக திருகோணமலை நகரசபை செயலாள தே.ஜெயவிஷ்னு செய்தியாளர்களுக்கு தெரிவித்தார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நகரசபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த பகுதிக்கு நகரசபை அதிகாரிகள் விரைந்து அதனை முத்திரையிட்டு மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அங்கு இனம் தெரியாத நபர் ஒருவரால் அரச கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதோடு நகரசபை உத்தியோகத்தர் ஒருவர் இதன்போது தாக்கப்பட்ட நிலையில் அவர் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் நகரசபை செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

மேலும் குறித்த தாக்குதல் இடம்பெற்றபோது அங்கு நின்றுகொண்டிருந்த பொலிஸாரும் அதனைத் தடுக்க மேற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (05)

## அக்கரைப்பற்று வலய மட்ட தமிழ் தினப் போட்டியில்:

# ஒலுவில் அல் – மதீனா வித்தியாலய மாணவர்கள் 9 பேர் வெற்றிப் பதக்கங்கள் பெற்று சாதனை!

(எஸ்.அஷ்ரப்கான்)

அக்கரைப்பற்று வலய மட்ட தமிழ் தினப் போட்டியில் ஒலுவில் அல் - மதீனா வித்தியாலயத்தில் இருந்து இசை, நடனம், கும்மி, கோலாட்டம், நிகழ்சியில் பங்கு பற்றிய 09 மாணவர்கள் வலய மட்டத்தில் வெற்றிப் பதக்கங்களைப் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அக்கரைப்பற்று அல் - முனவ்வறா கனிஷ்ட வித்தியாலயத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மற்றும் பொத்துவில் ஆகிய கல்விக் கோட்டங்களிலுள்ள பாடசாலைகள் பங்கு பற்றின.

இதில் ஒலுவில் அல் - மதீனா வித்தியாலயத்தில் இருந்து இசை நடனம், கும்மி கோலாட்டம் நிகழ்சியில் பங்கு பற்றிய ஏ.ஆகிபா ஷஹ்லா, எம்.எஸ்.ஆயிஷா, எம்.எஸ்.ஷாரா அதீமா,

ரி.றுஸ்னத் நப்லா, ஜே.அதிகா, ஏ.எம்.ரின்சா, ஏ. டீபி.சைனப் மிஸ்பா,

எம்.ரி.அக்ஸா, எப்.ஹப்ஸா மர்யம் ஆகிய மாணவர்களே வலய மட்டத்தில் வெற்றிப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சியை ஆசிரியை ஜே. நூர் சுஹாறா வழங்கினார். இவ்வாசிரியை மற்றும் மாணவர்களை பாடசாலை சமூகம் பாராட்டுகின்றது. (05)

# காணி ஆவணம் வழங்கும் சேவை

(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதியின் பணிப்புரையில் 'உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கான நிபந்தனையற்ற பூரண அளிப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மக்களை தெளிவூட்டல் மற்றும் ஆவணங்களை பொறுப்பேற்றல் தொடர்பான நடமாடும் சேவை இரண்டாவது நாளாக இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலும், மாணிக்கமடுவில் அமைந்துள்ள இறக்காமம் - 07 ஆம் கிராம உத்தியோகத்தர் காரியாலயத்திலும் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ். எம்றஸ்ஸான் (நளீமி) அவர்களின் ஆலோசனையில், உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி அஹமட் நசீல் அவர்களின் தலைமையில் உரித்து காணி ஆவணம் வழங்கும் நடமாடும் சேவை சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச செயலக காணிப் பிரிவு காணி உத்தியோகத்தர்கள், காணி வெளிக்களப் போதனாசிரியர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இறக்காமம் - 03,04 மற்றும் இறக்காமம்-07 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு இந்த நடமாடும் சேவை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(05)





# கிளிநொச்சி மாவட்ட கல்மடு குளத்தின் 93 ஆவது ஆண்டு







கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு குளத்தின் 93 ஆவது ஆண்டை காலடி எடுத்து வைக்கும் கல்மடு குளத்தின் 93 ஆவது ஆண்டு விழாவும் அப்பகுதியில் அமர்ந்து அடியார்களை காத்தருளும் நெல் முத்து விநாயகப் பெருமானுக்கு 93 வருடங்களின் பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழாவில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) கல்மடுகுளத்திலிருந்து 93 பெண்களால் கல்மடு குளத்தில் இருந்து நீர் எடுத்துவரப்பட்டு நெல் முத்து விநாயகப் பெருமாளுக்கு மகாஅபிஷேக பூஜை வழிபாடுகள் நடைபெற்றது. இன்று (திங்கட்கிழமை) அன்று 93 பாணையில் பொங்கள் பெருவிழாவும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05 - 113)

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தின் அமைச்சுகளுக்கு ஆளுநரால் புதிய செயலாளர்கள் நியமனம்





(கே எ ஹமீட்)

கிழக்கு மாகாணத்தின் அமைச்சிகளுக்கு புதிய செயலாளர்களை ஆளுநர் செந்தில் தொண்டமான் நியமித்துள்ளார்.

அவர்களுக்கான நியமனக் கடிதம் ஆளுநரால் நேற்று வழங்கிவைக்கப்பட்டது.

விவசாய அமைச்சின் செயலாளராக நசீரும் பிரதி பிரதம செயலாளராக பைசலும் ஆளுநரால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர். (05)

# தலவாக்கலையிலிருந்து கதிர்காம யாத்திரை

(பி.கேதீஸ்)

கதிர்காம உற்சவத்தை முன்னிட்டு தலவாக்கலை ஸ்ரீகதிரேசன் ஆலய பாதயாத்திரை குழுவினர் தமது பாதயாத்திரை பயணத்தை சனிக்கிழமை ஆரம்பித்தனர். யாத்திரை குழுவினர் தலவாக்கலை, லிந்துலை, நானு ஓயா, நுவரெலியா வழியாக சீத்தா எலிய, ஹக்கல, பொரகஸ், கெப்பட்டிப்பொல,வெலிமட, பண்டாரவளை,எல்ல,வெல்லவாய, புத்தள வழியாக கதிர்காமத்தை சென்றடையவுள்ளனர். (05)

# ஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீடு

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த பிரபல கவிஞர் வைரமுத்து கணேசன் எழுதிய 'திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாறு' நூல் வெளியீட்டு விழா நேற்று(ஞாயிற்றுக்கிழமை) உகந்தமலை முருகன் ஆலயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது .

காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய தலைவருமான கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது . பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வீ.ரி. சகாதேவராஜா , திருமலை ஆசிரியை திருமதி கி. குமுதினி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள் .

அங்கே முதல் பிரதி அதைத் தொடர்ந்து இணைப்பிரதிகள் பக்தர்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.(05)

# மாணவர்களுக்கு கேரள கஞ்சா சூசகமாக விற்றுவந்தவர் கைது

*நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களுக்கு கேரள கஞ்சாவை சூட்சுமமாக விற்பனை செய்து வந்த குடும்பஸ்தரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை மக்பூலியா பகுதியில் சனிக்கிழமை இரவு கேரளா கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை பின்தொடர்ந்து பொலிஸார் பெரும் சிரமத்திற்கு மத்தியில் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 36 வயதுடைய குடும்பஸ்தர் என்பதுடன் அவர் வசம் இருந்து 11,100 மில்லி கிராம் கேரளா கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர்.*

*மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)*

# கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களின் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கல்





( வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கும் பணியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னெடுத்துள்ளார்.

அதன் ஓர் அங்கமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தலைவர்களை ஆளுநர் செந்தில் தொண்டமான் மாவட்டம் மாவட்டமாக சந்தித்து வருகின்றார்.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்துக்கான சந்திப்பு திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என் .மணிவண்ணன் அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி உள்ளிட்ட உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அச்சமயம் காரைதீவு சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் 'கொரோனா காலகட்டத்தில் எமது ஊழியர் ஒருவர் மரணம் அடைந்தார் . இரண்டு குழந்தைகளின் தந்தை அவர். குடும்பம் நிர்க்கதியான நிலையில் நடுவீதிக்கு வந்திருந்தது. அதன் காரணமாக அவரது மனைவியை தற்காலிகமாக பணிபுரிய உதவினோம். இன்றும் பணியாற்றி வருகிறார்.முடிந்தால் அவரை இணைத்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததற்கு அங்கு பச்சைக் கொடி காட்டப்பட்டது .

மேலும் ஆளுநர் எங்களது பதவிக்காலம் முடிந்தாலும் எங்களை அரவணைத்து எங்களை உள்வாங்கி இந்த பணிகளை முன்னெடுத்துச் செல்வது வரவேற்புக்குரியது. நன்றி கூறுகின்றோம் என்று சொன்னார். அதுக்கு பதிலளித்த ஆளுநர் இது உங்கள் காலத்தில் உங்களால் ஆரம்பிக்கப்பட்ட கோரிக்கை .ஆகவே தான் உங்கள் முன்னிலையில் இவர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும் என்ற சிந்தனையில் உங்களை அழைத்து இருக்கின்றேன் .

ஆகவே அதற்கான வேலைகள் இன்னும் இரண்டு வாரத்தில் நடைபெறும் என்று கூறினார். (05)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச நீதி கோரி நேற்று ஆர்ப்பாட்டம்

## வவுனியாவிலும் நடந்தது








காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தால் பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) குறித்த கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் "எமக்கு சர்வதேச நீதியே வேண்டும், எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே, ஓஎம்பி அலுவலகம் எமக்கு வேண்டாம், கையில் கொடுத்த பிள்ளைகளுக்கு மரண சான்றிதழ் எதற்கு, நாம் இழப்பீட்டை கோரவில்லை, கையில் தந்த எமது சிறுவர்கள் எங்கே" என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி ஜெனீற்றா -

எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது. சர்வதேச நீதியே எமக்கு வேண்டும். ஓம்எம்பி அலுவலகம் எமக்கு தேவையில்லை எனக் கூறிய போதும் அதனை இரகசியமாக எமது பகுதிகளில் நிறுவியுள்ளார்கள். தற்போதைய ஜனாதிபதி ரணில், கிராம அலுவலர் ஊடக ஒஎம்பி அலுவலகத்தின் வேலைகைள முன்னெத்துள்ளார். வாழ்வாதார உதவிகளை வழங்கி எமது போராட்டத்தை மழுங்கடிக்க முற்படுகிறார்கள். இது தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விழிப்பாக இருக்க வேண்டும். எமக்கு நீதி வேண்டும். உயிர் உள்ளவரை நீதிக்காக நாம் போராடுவோம் எனத் தெரிவித்தார். (05 -100)

# வவுனியா வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றவர் வீதியில் சடலமாக மீட்பு

*வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் அங்கிருந்து தப்பிச் சென்றவர் வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.*

*வவுனியா, கோவில்புதுக்குளம், ராணிமில் வீதி சந்திப் பகுதியில் சனிக்கிழமை இரவு குறித்த சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த வவுனியா, ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த லியோசியஸ் டெல்சன் என்பவர் வைத்தியசாலையில் ஊசி போடுவதற்கு பயந்து வைத்தியசாலையில் இருந்து விடுகை பெறாது இரவு தப்பி வீடு நோக்கி சென்றுள்ளார்.*

*இந்நிலையில் வவுனியா, கோவில்புதுக்குளம், ராணிமில் சந்தியில் மரணமடைந்த நிலையில் சடலம் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அச் சடலத்தை மீட்டனர்.*

*வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தர். வீதியால் சென்ற வாகனம் குறித்த நபர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் இதன் காரணமாகவே குறீத்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் வவுனியா பொலிஸார் மற்றும் போக்குவரத்து பொலிஸார் ஆகியோர் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05 – 100)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2024இல் வெளியிடப்பெற்றது